www.Padasalai.Net www.CBSEtips.in
TARGET STUDY CENTRE - VILLUPURAM
7639000355 (வெற்றி இலக்கை நோக்கி சங்கமம்) 7639000366

வினாத் தொகுப்பு எண் :

**22071043**

**GRIVGTGS/2022**

பதிவு எண்

**2022**

# பொதுத்தமிழ் (பத்தாம் வகுப்பு தரம்) மற்றும் பொது அறிவு (பத்தாம் வகுப்பு தரம்)

இந்த வினாப் புத்தகம்
பகுதி – அ (பொதுத்தமிழ் – பத்தாம் வகுப்பு தரம்) மற்றும்
பகுதி-ஆ-வினை (பொது அறிவு – பத்தாம் வகுப்பு தரம்) உள்ளடக்கியது

கால அளவு : மூன்று மணி நேரம்] [மொத்த மதிப்பெண்கள் : 300

**வினாக்களுக்கு பதிலளிக்கும் முன் கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்**

## முக்கிய அறிவுரைகள்

1. இந்த வினாத் தொகுப்பு, தேர்வு தொடங்குவதற்கு 15 நிமிடங்களுக்கு முன்னதாக வழங்கப்படும்.
2. இந்த வினாத் தொகுப்பு, **200** வினாக்களைக் கொண்டுள்ளது.
3. **பகுதி-அ-வில் குறைந்தபட்ச மதிப்பெண் (40% அதாவது 60 மதிப்பெண்) பெறாத தேர்வர்களின் பகுதி-ஆ-விற்கான விடைத்தாள் மதிப்பீடு செய்யப்படமாட்டாது. பகுதி-அ-வில் தேர்ச்சி பெற்ற விண்ணப்பதாரர்களின், பகுதி ஆ-வில் பெற்ற மொத்த மதிப்பெண்கள் மட்டும் தரவரிசை பட்டியலுக்கு எடுத்துக் கொள்ளப்படும்.**
4. விடையளிக்கத் தொடங்கும் முன் இவ்வினாத்தொகுப்பில் எல்லா வினாக்களும் வரிசையாக இடம் பெற்றுள்ளனவா என்பதையும், இடையில் வெற்றுத்தாள்கள் எவையும் இல்லை என்பதையும் உறுதி செய்து கொள்ளவும். **வினாத் தொகுப்பில் ஏதேனும் குறைபாடு இருப்பின், அதனை முதல் பத்து நிமிடங்களுக்குள் அறைக்கண்காணிப்பாளரிடம் தெரிவித்து, சரியாக உள்ள வேறொரு வினாத்தொகுப்பினை பெற்றுக்கொள்ள வேண்டும். தேர்வு தொடங்கிய பின்பு இது குறித்து முறையிட்டால் வினாத் தொகுப்பு மாற்றித் தரப்படமாட்டாது.**
5. **எல்லா** வினாக்களுக்கும் விடையளிக்கவும். **எல்லா** வினாக்களும் சமமான மதிப்பெண்கள் கொண்டவை.
6. உங்களுடைய பதிவு எண்ணை இந்தப் பக்கத்தின் வலது மேல் மூலையில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் நீங்கள் எழுத வேண்டும். வேறு எதையும் வினாத்தொகுப்பில் எழுதக்கூடாது.
7. விடைத்தாள் ஒன்று விடைகளை குறிப்பதற்கு அறைக்கண்காணிப்பாளரால் உங்களுக்கு வழங்கப்படும். விடைகளைக் குறிப்பது உள்ளிட்ட அவசியம் பின்பற்றப்பட வேண்டிய அறிவுரைகள் விடைத்தாளிலும், தேர்வுக்கூட அனுமதிச் சீட்டிலும் வழங்கப்பட்டுள்ளன.
8. உங்களுடைய வினாத்தொகுப்பு எண்ணை (Question Booklet Number) விடைத்தாளின் முதல் பக்கத்தில் அதற்கென அமைந்துள்ள இடத்தில் **கருமை நிற மையுடைய பந்துமுனைப் பேனாவினால்** குறித்துக்காட்ட வேண்டும். வினாத்தொகுப்பு எண்ணை விடைத்தாளில் சரியாகக் குறித்துக் காட்டத் தவறினாலோ அல்லது குறிக்கத் தவறினாலோ உங்களுடைய விடைத்தாள் செல்லாததாக்கப்படும்.
9. ஒவ்வொரு வினாவும் (A), (B), (C), (D), (E) என ஐந்து பதில்களை (விடைகள்) கொண்டுள்ளது. நீங்கள் (A) அல்லது (B) அல்லது (C) அல்லது (D) இவைகளில் ஒரே ஒரு சரியான விடையைத் தெரிவு செய்து விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட சரியான விடை இருப்பதாக நீங்கள் கருதினால், மிகச்சரியானது என நீங்கள் எதைக்கருதுகிறீர்களோ அந்த விடையை விடைத்தாளில் குறித்துக்காட்ட வேண்டும். **உங்களுக்கு விடை தெரியவில்லை எனில், நீங்கள் (E) என்பதை அவசியம் நிரப்பவேண்டும்.** எப்படியாயினும் ஒரு கேள்விக்கு ஒரே ஒரு விடை தான் தேர்ந்தெடுக்க வேண்டும். நீங்கள் ஒரு கேள்விக்கு ஒன்றுக்கு மேற்பட்ட விடையளித்தால், அவற்றுள் ஒரு விடை சரியானதாக இருந்தாலும் அந்த விடை தவறானதாகவே கருதப்படும்.
10. நீங்கள் வினாத்தொகுப்பின் எந்தப்பக்கத்தையும் நீக்கவோ அல்லது கிழிக்கவோ கூடாது. தேர்வு நேரத்தில் இந்த வினாத்தொகுப்பினையோ அல்லது விடைத்தாளையோ தேர்வு அறையைவிட்டு வெளியில் எடுத்துச் செல்லக்கூடாது. தேர்வு முடிந்தபின் நீங்கள் உங்களுடைய விடைத்தாளை கண்காணிப்பாளரிடம் கொடுத்துவிடவேண்டும். இவ்வினாத்தொகுப்பினை தேர்வு முடிந்த பின்னர் மட்டுமே நீங்கள் எடுத்துச் செல்ல அனுமதிக்கப்படுவீர்கள்.
11. **குறிப்புகள் எழுதிப்பார்ப்பதற்கு வினாத்தொகுப்பின் கடைசிப்பக்கத்திற்கு முன் உள்ள பக்கங்களை பயன்படுத்திக் கொள்ளலாம். இதைத்தவிர, வினாத்தொகுப்பின் எந்த இடத்திலும் எந்தவித குறிப்புகளையும் எழுதக்கூடாது. இந்த அறிவுரை கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.**
12. கேள்வி வரிசை எண்கள். 101 முதல் 200 வரை (பகுதி-ஆ) ஆங்கில வடிவே இறுதியானது.
13. நீங்கள் மேற்கண்ட அறிவுரைகளில் எவற்றையாவது பின்பற்றத் தவறினால் தேர்வாணையம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு உள்ளாக நேரிடும் என அறிவுறுத்தப்படுகிறது.

ENGLISH VERSION OF THE ABOVE INSTRUCTIONS ARE PROVIDED ON THE BACKSIDE OF THIS BOOKLET

ப [Turn over


www.targettnpsc.com Targetteams Villupuram
Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

# TNPSC

# Gr IV MODEL TEST – I

# QUESTION PAPER

## WHATSAPP TO UR NAME & NATIVE

## 7639000366

## 7639000355


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

பகுதி –அ

01. அன்பின தோழி – அடிகோடிட்ட சொல்லின் இலக்கண குறிப்பறிக.

A. பெயரெச்சம்
B. ஒன்றன்பால் அஃறிணை வினைமுற்று
**C. பலவின்பால் அஃறிணை வினைமுற்று**
D. செய்யும் என்னும் வினைமுற்று

02. நானே தொடக்கம், நானே முடிவு
நானுரைப்பது தான் நாட்டின் சட்டம் – யாருடைய கூற்று?

A. வண்ணதாசன் B. வாணிதாசன் **C. கண்ணதாசன்** D. பாரதிதாசன்

03. தந்தை பெரியாரின் வேண்டுகோளுக்கிணங்க 25 நாள்களில் திருக்குறளுக்கு உரை எழுதியவர் யார்?

A. பாரதிதாசன் B. அண்ணா **C. புலவர் குழந்தை** D. சுரதா

04. எவ்வகை வாக்கியம் என கண்டெழுததல் : 'அப்துல் நேற்று வந்தான்'

**A. தன்வினைத்தொடர்** B. உடன்பாட்டு வினைத்தொடர்
C. பிறவினைத்தொடர் D. செயப்பாட்டு வினைத்தொடர்

05. கீழ்க்காணும் சொல்லுக்கு பொருந்தாததை தேர்க. "முக்குழல்"

A. கொன்றை **B. காயா** C. ஆம்பல் D. மூங்கில்

06. பொருந்தா இணையை கண்டறிக.

**A. அள்ளல் – அள்ளுதல்** B. வெரீஇ – அஞ்சி
C. நந்து – சங்கு D. முத்தம் – முத்து

07. வாக்கியங்களை கவனி :–

கூற்று (A) : (i) பந்து உருண்டது என்பது தன்வினை
(ii) உருட்டவைத்தான் என்பது பிறவினை

காரணம் (R) : எழுவாய் ஒரு வினையைச் செய்தாள் அது செய்வினை எனப்படும்.
எழுவாய் ஒரு வினையைச் செய்ய வைத்தால் அது செயப்பாட்டு வினை எனப்படும்

A. கூற்று (A) , காரணம் (R) சரி மேலும் கூற்று (A) வுக்கு, காரணம் (R) சரியான விளக்கமாகும்
B. கூற்று (A) தவறு, காரணம் (R) சரி
**C. கூற்று (A) சரி, காரணம் (R) தவறு**
D. கூற்று (A) , காரணம் (R) சரி மேலும் கூற்று (A) வுக்கு, காரணம் (R) சரியான விளக்கமல்ல

08. கூற்று காரணம் – சரியா? தவறா?

வாழ்க தமிழ்மொழி வாழ்க தமிழ்மொழி
வாழ்க தமிழ்மொழியே
வானம் அறிந்த தனைத்தும் அறிந்து
வளர்மொழி வாழியவே

கூற்று (1) தமிழை வாழ்த்தி பாடப்பட்ட நூல்
(2) பாரதியார் கவிதைகள் என்னும் தலைப்பில் இடம் பெற்றுள்ளது
(3) இதனைப் பாடியவர் பாரதி தாசன்

A. கூற்று 1, 2, 3 சரி B. கூற்று 1, 2, 3, தவறு
C. கூற்று 3 சரி 1, 2 தவறு **D. கூற்று 1, 2 சரி, 3 தவறு**

09. கீழ்காண்பவைகளில் "பெண்மையை" முதன்மைப்படுத்தும் "புரட்சிக் காப்பியம்" எது?

A. குடும்பவிளக்கு B. பாஞ்சாலிசபதம்
C. மணிமேகலை D. சிலப்பதிகாரம்

10. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கு: 'சோறு" சரியான சொல்

A. தின்றான் B. விழுங்கினான் C. சாப்பிட்டான் D. உண்டான்

11. பொருத்துக :- (சாகித்திய அகாதமி விருது)

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. முதலில் இரவு வரும் | 1. ஆதவன் | A. | 1 | 2 | 3 | 4 |
| b. அப்பாவின் சிநேகிதர் | 2. அசோகமித்திரன் | B. | 1 | 2 | 4 | 3 |
| c. மின்சாரப்பூ | 3. மேலாண்மை பொன்னுசாமி | C. | 1 | 3 | 2 | 4 |
| d. சூடிய பூ சூடற்க | 4. நாஞ்சில் நாடன் | D. | 1 | 4 | 2 | 3 |

12. சொற்களை இணைத்து புதிய சொல் உருவாக்கு: 'யானை' – சரியான சொல்

A. குட்டி B. குஞ்சு C. குழவி D. கன்று

13. RISAT – 1 – திட்டத்தின் இயக்குநராகப் பணியாற்றியவர் யார்?

A. அருணன் சுப்பையா B. வளர்மதி
C. அப்துல் கலாம் D. மயில்சாமி அண்ணாதுரை

14. 'புதுகை' என்னும் மரூவுச் சொல் குறிப்பிடும் ஊர்?

A. புதுச்சேரி B. புதுக்கோட்டை C. புத்தூர் D. புதுப்பாளையம்

15. பொருந்தா ஒன்றை தேர்க

A. இளைஞர்களுக்குப் பகுத்தறிவும் சுயமரியாதையும் தேவை
B. சட்டம் ஒரு இருட்டறை – அதில் வழக்கறிஞரின் வாதம் ஒரு விளக்கு
C. உலகில் சாகாவரம் பெற்ற பொருள்கள் புத்தகங்களே!
D. நடந்தவை நடந்தவையாக இருக்கட்டும்; இனி நடப்பவை நல்லவையாக இருக்கட்டும்

16. வேர்சொல்லின் வினைமுற்றைக் காண்க "படி"

A. படித்தல் B. படித்த C. படித்து D. படித்தான்

17. கீழ்க்காணும் கவிஞருடன் தொடர்புடையதை தேர்க.

"பாரதியார்"

I. கம்பன் இசைத்த கவியெல்லாம் நான்
II. "ஓசைதரும் இன்பம் உவமையிலா இன்பமடா"
III. பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்

A. I மற்றும் II மட்டும்
B. II மற்றும் III மட்டும்
C. I மற்றும் III மட்டும்
D. I, II மற்றும் III அனைத்தும்

18. பிழையை நீக்கி எழுதுக.

A. ஒரு அறிவு B. ஒரு அறிவின்
C. ஒரு அறிவுக்கு D. ஓரறிவு

19. தவறானதை தேர்க. "மணிவகை"

A. முதிரை – அவரை, துவரை
B. பயறு – அவரை, உளுந்து
C. விதை – மா, பனை
D. முத்து – வேம்பு, ஆமணக்கு

20. பொருத்துக

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. சூரன் | 1. பெரும்பரப்பு | A. | 3 | 1 | 4 | 2 |
| b. பொக்கிஷம் | 2. மிகுதி | B. | 3 | 4 | 2 | 1 |
| c. சாஸ்தி | 3. செல்வம் | C. | 4 | 3 | 1 | 2 |
| d. விஸ்தாரம் | 4. வீரன் | D. | 4 | 3 | 2 | 1 |

21. சந்திப்பிழை இல்லாத தொடரை காண்க

A. மருத்துவர் செல்வதாக கூறிச் சென்றார்
B. மருத்துவர் செல்வதாகக் கூறிச் சென்றார்
C. மருத்துவர் செல்வதாகக் கூறி சென்றார்
D. மருத்துவர் செல்வதாக கூறி சென்றார்

22. சரியான பொருளறிந்து பொருத்துக

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. நீயே செய் | 1. உறுவது கூறல் விடை | A. | 3 | 1 | 4 | 2 |
| b. வராமல் இருப்பேனா? | 2. சுட்டு விடை | B. | 3 | 4 | 2 | 1 |
| c. கால் வலிக்கும் | 3. வினா எதிர்வினாவுதல் விடை | C. | 4 | 3 | 1 | 2 |
| d. வலப்பக்கம் உள்ளது | 4. ஏவல் விடை | D. | 4 | 2 | 3 | 1 |

23. விடைகேற்ற வினா அமைத்திடுக :–
நாலடியார், நாலடி நானூறு என்றும் வேளாண்வேதம் என்றும் அழைக்கப்படுகிறது

A. நாலடியார் எவ்வாறெல்லாம் அழைக்கப்படுகிறது?
B. நாலடி நானூறு என்றழைக்கப்படும் நூல் எது?
C. வேளாண்வேதம் என்றழைக்கப்படும் நூல் எது?
D. நாலடியார் வேளாண்வேதம் என்று அழைக்கப்பட காரணம் என்ன?

24. இரு பொருள் தருக : திங்கள்

A. நிலவு, துன்பம்
B. நிலவு, மாதம்
C. கிழமை, ஆகாயம்
D. மாதம், வாரம்

25. கீழ்காணும் சொற்களில் கூட்டப் பெயர்களை கண்டுபிடித்து பொருத்துக : (கூட்டமாக)

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. கல் | 1. கட்டு | A. | 3 | 1 | 4 | 2 |
| b. பழம் | 2. குவியல் | B. | 2 | 4 | 1 | 3 |
| c. புல் | 3. மந்தை | C. | 4 | 3 | 1 | 2 |
| d. ஆடு | 4. குலை | D. | 4 | 2 | 3 | 1 |

26. இச்செயலை செய்தது மங்கையா? மணிமேகலையா என் வினவுதல் என்ன வகை வினா?

A. அறிவினா
B. ஏவல் வினா
C. கொடைவினா
D. ஐய வினா

27. அடைப்புக்குள் உள்ள எழுத்தை தகுந்த இடத்தில் சேர்க்க. (ஐ)

A. ஆடை_________ அணிந்தேன்
B. தோசை_________ மாவு
C. பள்ளி _________ சென்றேன்
D. கண்ணன் _________ சட்டை

28. அகர வரிசைப்படி சொற்களை சீர் செய்க.

A. உயிரளபெடை, ஒற்றளபெடை, தனிமொழி, தொடர்மொழி, பொதுமொழி
B. உயிரளபெடை, தனிமொழி, ஒற்றளபெடை, தொடர்மொழி, பொதுமொழி
C. உயிரளபெடை, ஒற்றளபெடை, தனிமொழி, பொதுமொழி , தொடர்மொழி,
D. ஒற்றளபெடை, தனிமொழி, தொடர்மொழி, உயிரளபெடை, பொதுமொழி

29. சந்திப்பிழையற்ற வாக்கியங்களை கண்டறிக.

1. காட்சியைப் பார் 2. என கேட்டார் 3. ஊருக்கு செல் 4. கதவைத் திற

A. 1 மற்றும் 4 B. 2 மற்றும் 3 C. 1 மற்றும் 3 D. 4 மற்றும் 2

30. பிழை திருத்தம் – வழுவுச் சொற்களை நீக்குதல்

A. நீ வந்தேன் B. நீ வந்தான் C. நீ வந்தாய் D. நீ வந்தாள்

31. கூற்றுகளை ஆராய்ந்து விடையளி:–

கூற்று (A) : "வேர்பாடு, தழைபாடு பிஞ்சினக்கால் பற்பசெந்தூரம் பாரே" என்றனர் சித்தர்கள்

காரணம் (R) : வேர், தழை ஆகியவற்றால் குணம் அடையாத போது சில நாட்பட்ட நோய்களுக்கு, தாவரங்கள் மட்டுமல்லாமல் உலோகங்களையும், பாஷாணங்களையும் சித்த மருந்துகளாக நம் முன்னோர்கள் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

A. கூற்று (A) , காரணம் (R) சரி மேலும் கூற்று (A) வுக்கு, காரணம் (R) சரியான விளக்கமாகும்
B. கூற்று (A) தவறு, காரணம் (R) சரி
C. கூற்று (A) சரி, காரணம் (R) தவறு
D. கூற்று (A) , காரணம் (R) சரி மேலும் கூற்று (A) வுக்கு, காரணம் (R) சரியான விளக்கமல்ல

32. கீழ்காணும் சொற்களை அகர வரிசைப்படுத்துக

A. வேற்றுமை, வீடு, வாரம், விசிறி, வலிமை
B. வீடு, வாரம், வேற்றுமை, விசிறி, வலிமை
C. வாரம், வேற்றுமை, விசிறி, வீடு, வலிமை
D. வலிமை, வாரம், விசிறி, வீடு, வேற்றுமை

33. முடியுடைய மூவேந்தர்களில் __________பழைமையானவர்கள் என்று கூறுபவர் உண்டு

A. சேரர்களோ B. சோழர்களோ
C. பாண்டியர்களோ D. பல்லவர்களோ

34. வட திசையில் இருந்து வீசும் காற்றை _____ என்று அழைப்பர்?

A. சாரல் காற்று B. தென்றல் காற்று
C. ஊதைக்காற்று D. வாடைக்காற்று

35. இந்திய அரசு மிக உயரிய "பாரத ரத்னா" விருதினை M. G. R. –க்கு வழங்கிய ஆண்டு எது?

A. 1967 B. 1960 C. 1977 D. 1988

36. ஓடும் இருக்கும் அதனுள் வாய் வெழுத்திருக்கும் நாடுங் குலைதனக்கு நாணாது" இப்பாடலில் இடம் பெற்ற அணியை சுட்டுக

A. பிறிது மொழிதல் அணி B. வேற்றுமை அணி
C. இரட்டுற மொழிதல் அணி D. உவமை அணி

37. "தமிழன்" இதழ் மூலம் தமிழ்நாடு மட்டுமின்றி மைசூர், கோலார், ஐதராபாத், இரங்கூன், மலேசியா, ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா போன்ற நாடுகளில் வாழ்ந்த தமிழர்களுக்கும் பகுத்தறிவுச் சிந்தனை, இன உணர்வு, சமூக சிந்தனை ஆகியவற்றை ஊட்டியவர்?

A. தந்தை பெரியார் B. சுரதா
**C. அயோத்திதாசர்** D. தாத்தா இரட்டமலை சீனிவாசன்

38. 'இந்த பெரியவரின் அடி நிழலில் இருந்து தமிழ் கற்க வேண்டும் என்னும் ஆவல் உண்டாகிறது' என்று காந்தியடிகள் குறிப்பிடுபவர் யாரை?

A. பெரியார் B. பாரதியார் C. ராஜாஜி **D. உ.வே.சா**

39. ஜெயகாந்தனின் எத்திரைப்படம் குடியரசு தலைவர் விருதை பெற்றது?

A. யாருக்காக அழுதான்
B. சிலநேரங்களில் சில மனிதர்கள்
**C. உன்னைப்போல் ஒருவன்**
D. ஊருக்கு நூறுபேர்

40. அவள், அவர், அது எவ்வகை சுட்டு?

A. அகச்சுட்டு B. அண்மைச்சுட்டு C. புறச்சுட்டு **D. சேய்மைச்சுட்டு**

41. கீழ்காணும் கூற்றுகளை ஆராய்க:– "பறை"

1. விலங்குத்தோலால் இழுத்துக் கட்டப்பட்ட கருவி பறையாகும்
2. பழங்காலத்தில் செய்திகளைத் தெரிவிக்க கோட்பறையை முழங்கினர்
3. பகைவர்களின் ஆநிரையைக் கவரச் செல்லும்போது ஆகோட்பறையை முழங்குவர்

A. 1 ம், 2 ம் சரி, 3 தவறு
B. 1 ம், 3 ம் சரி, 2 தவறு
C. 2 ம், 3 ம் சரி, 1 தவறு
**D. 1 ம், 2 ம், 3 ம் சரி**

42. துள்ளல் ஓசையில் வரும் பா வகை

A. வெண்பா B. ஆசிரியப்பா **C. கலிப்பா** D. வஞ்சிப்பா

43. பொதியை ஏத்தி வண்டியிலே
பொள்ளாச்சி சந்தையிலே
விருதுநகர் வியாபாரிக்கு – செல்லக்கண்ணு
நீயும் வித்துப்போட்டுப் பணத்தை எண்ணு'
செல்லக்கண்ணு – என்ற பாடலை எழுதியவர் யார்?

**A. அ. மருதகாசி**
B. உடுமலைநாராயணகவி
C. பட்டுக்கோட்டை கல்யாணசுந்தரம்
D. கவிஞர் கண்ணதாசன்

44. பின்வருவனவற்றில் வேலுநாச்சியரை பற்றிய தகவல்களில் பொருந்தாதது எது?

A. பெண்கள் படைப்பிரிவின் தலைவி குயிலி
B. ஆண்கள் படைப்பிரிவின் தலைமை மருது சகோதரர்கள்
**C. வேலுநாச்சியார் உடையாளுக்கு நடுகல் நடுவதற்கு ஏற்பாடு செய்யும்படி மருது சகோதரர்களிடம் கூறினார்**
D. வேலுநாச்சியார் சிவகங்கையை மீட்ட ஆண்டு 1780

45. மெல்லினம் மிகும் இடங்களை காண்க

I. 'ய' கர ஈற்றுச் சொற்கள் முன் மெல்லினம் மிகும்
II. வேற்றுநிலை மெய்ம்மயக்கத்தில் ய, ர, ழ, முனனர் மெல்லினம் மிகும்
III. உயிரெழுத்தை இறுதியில் கொண்ட மரப்பெயர்களுக்கு முன்னர் மெல்லினம் மிகும்
IV. 'புளி' என்னும் சுவைப் பெயர் மற்றும் 'பூ' என்னும் பெயர் முன்னர் வல்லெழுத்து மட்டுமின்றி மெல்லினம் மிகும்.

A. I, II, III சரி
B. II, III, IV சரி
C. I, III, IV சரி
D. I, II, III, IV சரி

46. கீழ்காணும் ஆசிரியர்களில் 'கனவு' என்னும் இலக்கிய இதழை நடத்தி வருபவர்?

A. சுப்பிரமணிய பாரதி
B. பாவேந்தர் பாரதிதாசன்
C. ராஜமார்த்தாண்டன்
D. சுப்ரபாரதி மணியன்

47. பாரத ஸ்டேட் வங்கியின் உரையாடு மென்பொருள் எது?

A. துலா B. சீலா C. குலரா D. இலா

48. கப்பல்களில் பயன்படுத்தியதாக கப்பல் சாத்திரம் குறிப்பிடும் கருவி?

A. சுக்கான் B. நங்கூரம் C. மரப்பிசின் D. சமுக்கு

49. இன்மையின் இன்னாத தியாதெனின் இன்மையின்
இன்மையே இன்னா தது – இதில் பயின்று வந்துள்ள அணி எது?

A. உவமையணி
B. வஞ்சப்புகழ்ச்சி அணி
C. இல் பொருள் உவமையணி
D. சொல்பொருள் பின்வருநிலையணி

50. சரியான விடையளி: (உரிச்சொற்கள்)

கூற்று 1 : செழுமை என்பது செழிப்பு, செழித்த, செழிக்கும் எனப் பெயராகவும், வினையாகவும் பயன்படுகிறது

கூற்று 2 : விழுமம் என்பது விழுப்பம், விழுமுதல், விழுமிய என பெயராகவும், வினையாகவும் பயன்படுகிறது.

A. கூற்று 1 சரி, கூற்று 2 தவறு
B. கூற்று 1 தவறு, கூற்று 2 சரி
C. கூற்று 1 மற்றும் கூற்று 2 இரண்டும் சரி
D. கூற்று 1 மற்றும் கூற்று 2 இரண்டும் தவறு

51. மதுரை நகருக்கு அருகே உள்ள கீழடி என்னுமிடத்தில் நடத்தப்பட்ட அகழாய்வு எத்தனை ஆண்டுகளுக்கு முற்பட்டது?

A. 3200 B. 1300 C. 2000 D. 2300


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

52. கூற்றுகளை ஆராய்ந்து விடையளி :–

கூற்று 1 : 1964 ஆம் ஆண்டு கோத்தாரி கல்விக்குழு தன் பரிந்துரையில் அனைத்து நிலையிலும் மகளிர் கல்வியை வலியுறுத்தியது

கூற்று 2 : பெண் முன்னேற்றத்தின் தடைக்கல்லாய் இருப்பது குழந்தைத் திருமணம். எனவே அதை தடுக்க 1929 ஆம் ஆண்டு சாரதா சட்டம் கொண்டு வரப்பட்டது

A. 1 மட்டும் சரி
B. 2 மட்டும் சரி
C. 1, 2 இரண்டும் சரி
D. 1, 2 இரண்டும் தவறு

53. கன்னியாகுமரி தமிழ்நாட்டுடன் இணைந்த ஆண்டு?

A. 1965 B. 1956 C. 1856 D. 1986

54. கூற்று காரணத்தை சரிபார்க்க

கூற்று (A) : (எ.கா) இந்த பொருள் வேண்டாம் "அதற்குப் பதிலாக இதை வைத்துக்கொள்"

காரணம் (R) : அதற்கு = அது + அன் + கு என பிரியும்
அது (சுட்டுப்பெயர்) + அன் (சாரியை) + கு (வேற்றுமை உருபு)
அதன்+கு = அதற்கு என்பதே சரி

A. காரணம், கூற்று இரண்டும் சரி, கூற்றுக்கு காரணம் சரியான விளக்கம்
B. காரணம் சரி, கூற்று தவறு
C. கூற்று சரி, காரணம் தவறு
D. காரணம், கூற்று இரண்டும் தவறு கூற்றுக்கு காரணம் சரியான விளக்கம் அல்ல

55. பொருத்துக

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. Software | 1. மென்பொருள் | A. | 1 | 2 | 3 | 4 |
| b. Browser | 2. உலவி | B. | 3 | 4 | 2 | 1 |
| c. Cursor | 3. ஏவி அல்லது சுட்டி | C. | 4 | 3 | 1 | 2 |
| d. Folder | 4. உறை | D. | 4 | 2 | 3 | 1 |

56. சரியான இணை அல்லாததை தேர்க:– "பட்டிமண்டபம்" சொல் இடம் பெறும் நூல்

I. மகத நன் நாட்டு மன்னன் வாள்வாய் வேந்தன் பகைபுறத்துக் கொடுத்த பட்டிபண்டபம் – சிலப்பதிகாரம்
II. பட்டிமண்டபத்து பாங்கு அறிந்து ஏற்றுமின் – மணிமேகலை
III. பட்டிமண்டபம் ஏற்றினை, ஏற்றினை; எட்டினோடு இரண்டும் அறியேனையே – கம்பராமாயணம்
IV. பன்ன அரும் கலைதெரி பட்டிமண்டபம் – திருவாசகம்

A. I மற்றும் II சரி
B. II மற்றும் III சரி
C. III மற்றும் IV சரி
D. I மற்றும் IV சரி

57. 'சிட்டுக்குருவியின் வீழ்ச்சி" யாருடைய வரலாற்று நூலின் பெயராகும்?

A. டாக்டர் சலீம் அலி
B. டாக்டர் அப்துல் கலாம்
C. எர்னஸ்ட் ஹெமிங்கே
D. டாக்டர் அப்துல் சலீம்

58. 'முழுமணிப் பூணுக்குப் பூண்வேண்டா யாரோ
அழகுக்கு அழகு செய் வார்" – இடம்பெறும் நூல் எது?

A. திருக்குறள் B. நாலடியார்
C. நீதிநெறிவிளக்கம் D. திருவிளையாடற் போற்றி கலிவெண்பா

59. பொருத்துக :

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. இயற்கை ஓவியம் | 1. சிந்தாமணி | A. | 3 | 1 | 4 | 2 |
| b. இயற்கை தவம் | 2. பெரிய புராணம் | B. | 3 | 4 | 2 | 1 |
| c. இயற்கை பரிணாமம் | 3. பத்துப்பாட்டு | C. | 3 | 1 | 4 | 2 |
| d. இயற்கை அன்பு | 4. கம்பராமாயணம் | D. | 4 | 2 | 3 | 1 |

60. Wondering at the Lute music coming from the Chamber Entered I to look up to in still my grand – daughter Learning by rote the verses of a didactic compilation – என்பதை மொழிபெயர்த்தவர் யார்?

A. கவிமணி தேசிய வினாயகனார் B. மகாகவி பாரதியார்
C. கவிஞர் தேசினி D. கௌரன்

61. கீழ்காண்பவைகளில் பொருத்தமற்றதை தேர்க

A. புனையா ஓவியம் கடுப்பப் புனைவால் – நெடுநல்வாடை
B. புனையா ஓவியம் புறம் போந்தன்ன – மணிமேகலை
C. இன்ன பலபல அழுத்துநிலை மண்டபம் – பரிபாடல்
D. துன்னுநர் சட்டவம் சுட்டு அறிவுறுத்தும் – சீவக சிந்தாமணி

62. கூற்று சரியா? தவறா?

கூற்று (1) : தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் டாக்டர் முத்துலட்சுமி அம்மையார்

கூற்று (2) : 1952 இல் அடையாறு புற்றுநோய் மருத்துவமனையை நிறுவினார்

கூற்று (3) : சென்னை மாநகராட்சியின் மேயராக இருந்தார்

A. கூற்று 1, 2, 3 தவறு B. கூற்று 1, 2 சரி 3 மட்டும் தவறு
C. கூற்று 1, 2, 3 சரி D. கூற்று 1 சரி, 2, 3 தவறு

63. கவிமணி தேசிக விநாயகத்தின் மொழிபெயர்ப்பு நூல் எது?

A. ஆசிய ஜோதி B. உமர்கயாம் பாடல்
C. மருமக்கள் வழி மான்மியம் D. மலரும் மாலையும்

64. பொருந்தா இணை எது?

I. விளை – உண்டாக்குதல்
II. விழை – விரும்பு
III. இளை – செடி
IV. இழை – நூல் இழை

A. I B. II C. III D. IV

65. நீலகேசி கூறும் நோயின் தன்மை எத்தனை வகைப்படும்

A. இரண்டு B. மூன்று C. நான்கு D. ஐந்து

66. பொருந்தாச் சொல்லை கண்டறிக

A. பாக்கு B. பஞ்சு C. பாட்டு D. பத்து

67. பொருத்துக :

a. தரைதளம் — 1. சொந்த நூல் படிப்பகம்
b. முதல் தளம் — 2. தமிழ் நூல்கள்
c. இரண்டாம் தளம் — 3. பொருளியல் சட்டம், கல்வி, வணிகவியல்
d. மூன்றாம் தளம் — 4. கணிணி அறிவியல், தத்துவம், அரசியல்
e. நான்காம் தளம் — 5. குழந்தைகள் பிரிவு, பருவ இதழ்கள்

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| A. | 3 | 1 | 4 | 2 | 5 |
| B. | 3 | 4 | 2 | 1 | 5 |
| C. | 1 | 5 | 2 | 3 | 4 |
| D. | 4 | 2 | 3 | 1 | 5 |

68. ஒருமை பன்மை பிழையற்ற தொடரைத் தெரிவு செய்க.

A. இவை பூக்கள் அன்று B. இவை பூ அன்று
C. இவை பூக்கள் அல்ல D. இவை பூ அல்ல

69. திருத்தொண்டர் தொகையை முதல் நூலாகக் கொண்டு சேக்கிழார் இயற்றிய நூல் எது?

A. பெரியபுராணம் B. திருவிளையாடற் புராணம்
C. தலபுராணம் D. தேவாரம்

70. சரியான விடையளி.

"இல்லறனும் துறவறனும் பிழைத்தனவோ யான அறியேன் எந்தாய் எந்தாய்"
– மேற்கண்ட பாடல் வரிகளில் 'எந்தாய்' என்பது யாரை குறிக்கிறது

A. இறைவன் B. உமாதேவி C. இடைகாடனார் D. குசேல பாண்டியன்

71. பொருத்துக :

a. வாரி — 1. தட்டுப்பாடின்றி
b. எஞ்சாமை — 2. வாட்டம் இன்றி
c. முட்டாது — 3. வருவாய்
d. ஒட்டாது — 4. குறைவின்றி

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 3 | 1 | 4 | 2 |
| B. | 3 | 4 | 1 | 2 |
| C. | 3 | 1 | 4 | 2 |
| D. | 4 | 2 | 3 | 1 |

72. ஒரு பொருளாக மதிக்கத் தகாதவரையும் மதிப்புடையவராக செய்வது?

A. கல்வி B. செல்வம் C. வீரம் D. அன்பு

73. விடை தேர்க. "முல்லைப்பாட்டின் சிறப்புகளை தேர்க"

I. முல்லை நிலத்தைப்பற்றி பாடப்பட்டது
II. பத்துப்பாட்டில் குறைந்த அடிகளை உடைய நூல்
III. முல்லைப்பாட்டு ஆசிரியப்பாவால் இயற்றப்பட்டது

A. II, III சரி I தவறு B. I, II, III சரி C. I, II சரி III தவறு D. I, III சரி II தவறு

74. பின்வரும் இலக்கணக் குறிப்பிற்குறிய பொருந்தாச் சொல்லை தேர்க?

A. காய்மணி B. உய்முறை C. செய்முறை D. மெய்முறை

75. கீழ்காணும் இலக்கணக்குறிப்புக்கு பொருத்தமில்லாததை தேர்க. 'தொழிற்பெயர்'

A. செப்பல் B. பயில் தொழில் C. ஆக்கல் D. மலர்ச்சி

76. மணிப்பால் மொழியில் கல்லூரியில் எந்திரவியல் பேராசிரியராக பணியாற்றியவர்?

**A. தி. சொ. வேணுகோபாலன்** B. க. ப. செய்குதம்பி பாவலர்
C. சந்தக் கவி தமிழழகனார் D. ஈரோடு தமிழன்பன்

77. சிலப்பதிகாரத்தில் 'மருவூர்பாக்கம்" சிறப்புகளை எடுத்தியம்பும் பாடல் வரிகள் இடம்பெற்றுள்ள காதை?

A. அரங்கேற்று காதை B. மனையம்படுத்த காதை
C. நாடுகாண் காதை **D. இந்திரவிழா ஊரெடுத்த காதை**

78. சரியான விடையை தேர்க;–

I. பாசவர் – என்றால் வெற்றிலை விற்போரை குறிக்கும்
II. ஓசுநர் – என்றால் எண்ணெய் விற்போரை குறிக்கும்
III. மண்ணீட்டாளர் – என்றால் ஓவியரை குறிக்கும்
IV. காருகர் – என்றால் சிற்பியை குறிக்கும்

**A. Iம், IIம் சரி** B. IIம், IIIம் சரி
C. IIIம், IVம் சரி D. IVம், IIம் சரி

79. "மாகால் எடுத்த முந்நர் போல
முழுங்கிசை நன்பனை அறைவனர் நுவல" – இத்தொடரில் அடிக்கோடிட்ட சொல்லின் பொருள்?

A. பனைமரம் B. மூங்கில் **C. முரசு** D. தென்றல்

80. வாக்கியங்களை ஆராய்ந்து விடையளி?

(i) இரண்டாம் இராசராச சோழனது காலந்தொட்டு மெய்கீர்த்திகள் கல்லில் வடிக்கப்பட்டுள்ளன

(ii) மெய்கீர்த்திகளே கல்வெட்டின் இரண்டாம் பகுதியில் மன்னரைப் பற்றிப் புகழ்ந்து இலக்கிய நயம்பட எழுதப்பெறும் வரிகள்

(iii) புலவர்களால் எழுதப்பட்டுக் கல்தச்சர்களால் கல்லில் பொறிக்கப்பட்டவை

A. i, ii சரி iii தவறு
**B. i, iii சரி ii தவறு**
C. i, ii தவறு iii சரி
D. ii, ii தவறு i சரி

81. அமெரிக்க வானியல் வல்லுநர் எடவின் ஹப்பிள் எவ்வாண்டு நம் பால்வீதி போன்று பல பால்வீதிகள் உள்ளன என்று நிருபித்தார்?

**A. 1924** B. 1918 C. 1938 D. 1824

82. "மாசற வசித்த வார்புறு வள்பின்" என்ற பாடல் வரிகள் இடம்பெற்ற நூல்?

A. அகநானுறு **B. புறநானூறு**
C. நற்றிணை D. புறப்பொருள் வெண்பாமாலை

83. ஒழுக்கத்தின் எய்துவர்?

A. நன்மை B. திண்மை C. வன்மை **D. மேன்மை**

84. "பெருகுவள" என்னும் அடைமொழியை பெற்ற நூல் எது

A. குறிஞ்சிபாட்டு B. பட்டினப்பாலை
**C. மதுரைக்காஞ்சி** D. மலைபடுகடாம்

85. கீழ்காண்பவைகளில் பொருத்தமற்றதை குறிப்பிடுக. "முல்லை நில பூ"

A. முல்லை B. குருந்தம் C. பிடவம் D. தோன்றிப்பூ

86. கீழே காணப்படும் கூற்றுகளில் பொருத்தமற்றவற்றை தெரிவு செய்க?

I. கம்பர் இராமனது வரலாற்றை தமிழில் வழங்கி 'கம்பராமாயணம்' என்று பெயரிட்டார்

II. கம்பராமாயணம் ஆறு காண்டங்களை உடையது. இதன் பாடல்கள் சந்த நயம் மிக்கவை

III. சோழநாட்டு திருவாரூரை சேர்ந்தவர், திருவெண்ணை நல்லூர் சடையப்ப வள்ளலால் ஆதரிக்கப்பட்டவர்

IV. சரசுவதிஅந்தாதி, சடகோபர் அந்தாதி, திருக்கை வழக்கம், ஏரெழுபது சிலையெழுபது முதலிய நூல்களை இயற்றியவர்

A. I மற்றும் IV பொருத்தமற்றவை
B. II மற்றும் IV பொருத்தமற்றவை
C. IV மற்றும் III பொருத்தமற்றவை
D. III மற்றும் I பொருத்தமற்றவை

87. "___________ கைய கொடுங்கோர் கோவலர் பின்னின்று உய்த்தர இன்னே வருகுவர் தாயர்" யார் யாரிடம் கூறிய கூற்று

A. இடைமகள் – முது பெண்டிருக்கு
B. இடைமகள் – கன்றுக்கு
C. முது பெண்டிர் – தலைவிக்கு
D. தலைவி – கன்றுக்கு

88. "தூசும் துகிரும், ஆரமும் அகிலும்" இத்தொடரில் "தூசு" என்னும் சொல்லிற்கு பொருள்?

A. மாசு B. பட்டு C. நறுமணப்பொடி D. மகரந்தம்

89. பின்வருவனவற்றுள் தவறான இணையை சுட்டுக.

A. கொடுஞ்செலவு X மெதுவாக செல்லுதல்
B. அருகுற X தொலைவில்
C. மாளாத X தீராத
D. தாவா X கெடுதல்

90. கோடிட்ட இடத்தை நிரப்புக

ஒற்று ஒற்றி தந்த பொருளையும் மற்றுமோர்
__________ __________ _____

A. அனைவரையும் ஆராய்வது ஒற்று

B. ஒற்றினால் ஒற்றிக் கொளல்

C. உகாஅமை வல்லதே ஒற்று

D. ஐயப்பாடு இல்லதே ஒற்று

91. "இஸ்மத் சன்னியாசி" என்னும் பட்டத்துடன் தொடர்புடையவர்கள்

A. சந்தாசாகிப் – வீரமாமுனிவர்
B. சந்தாசாகிப் – நாகூர் ரூமி
C. சந்தாசாகிப் – குணங்குடி மஸ்தான் சாகிப்
D. சந்தாசாகிப் – உமறுப்புலவர்

92. உரைநடையும் கவிதையும் இணைந்து யாப்பு கட்டுகளுக்கு அப்பாற்பட்டு உருவாக்கப்படும் கவிதை

A. வசனகவிதை
B. புதுக்கவிதை
C. மரபுக்கவிதை
D. எழுத்துக்கவிதை

93. ஐம்பெருங்காப்பிய முறைவைப்பில் 'நந்தா என்ற அடைமொழி பெற்று வரும் நூல் எது?

A. சிலப்பதிகாரம் B. மணிமேகலை
C. வளையாபதி D. குண்டலகேசி

94. கீழ்காணும் செய்யுளில் அடிக்கோடிட்ட சொல்லுக்கு எதிர்சொல் தருக?

"அலங்கு கழை நரலும் ஆயிப்படுகர்ச்
சிலம்பு அடைந்திருந்த பாக்கம் எய்தி

A. பள்ளம் B. ஒலிக்கும் C. கூத்தர் D. மேடு

95. பொருத்துக

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. மாமலரே | 1. வடுப்படுவன | A. | 4 | 1 | 2 | 3 |
| b. மாவே | 2. எழுகழனியே | B. | 3 | 4 | 2 | 1 |
| c. போர்மலைவன | 3. கொடியவயின | C. | 4 | 3 | 1 | 2 |
| d. கலவுகளே | 4. கடியவாயின | D. | 4 | 2 | 3 | 1 |

96. "உள் முறை வெள்ளம் மூழ்கி ஆர்தருபு
மீண்டும் பீடு உயர்வு ஈண்டி, அவற்றிற்கும்
– மேற்கண்ட செய்யுளில் 'சிறப்பு' என்னும்பொருள் தரும் சொல் எது?

A. உயர்வு B. ஈண்டு C. பீடு D. ஆர்தருபு

97. வேளாண்மை செழிக்கவும் மானுடம் தழைக்கவும் ___________ திங்களில் நடத்தப்படும் பொன் ஏர் பூட்டுதல் தமிழர் பண்பாட்டின் மகுடம் ஆகும்

A. சித்திரை B. புரட்டாசி C. ஐப்பசி D. கார்த்திகை

98. சங்க நூல்களுள் பண்ணோடு பாடப்பட்ட நூல்?

A. பதிற்றுப்பத்து B. பரிபாடல் C. கலித்தொகை D. குறுந்தொகை

99. கோடிட்ட இடங்களை நிரப்புக :

"வண்மையல்ல யோர் ___1____ யின்மயால்
திண்மையல்ல நேர் __2___ இன்மையால்
உண்மையில்லை ____3____ யிலமையால்
வெண்ணையல்ல ____4__ மேவலால்

A. 1. வறுமை 2. செறுநர் 3. பொய்யுரை 4. பல்கேள்வி
B. 1. செறுநர் 2. வறுமை 3. பொய்யுரை 4. பல்கேள்வி
C. 1. பொய்யுரை 2. செறுநர் 3. வறுமை 4. பல்கேள்வி
D. 1. பல்கேள்வி 2. பொய்யுரை 3. செறுநர் 4. வறுமை

100. பொருந்தா இணையை தேர்க

A. சிலம்பு, கிண்கிணி – காலில் அணிவது B. சுட்டி – நெற்றியில் அணிவது
C. குண்டலம், குழை – காதில் அணிவது D. சூழி – இடையில அணிவது

## பகுதி – ஆ

101. 'கடவுளின் அரசாங்கம் உன்னில் உள்ளது' என்ற புத்தகத்ததை எழுதியவர்?

A. ஜான் ரஸ்கின் **B. டால்ஸ்டாய்** C. தாரோ D. டேவின்சன்

102. பொருத்துக :

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. டாக்டர் எஸ். ராதாகிருஷ்ணன் | 1. 1835 | A. | 1 | 2 | 3 | 4 |
| b. கோத்தாரி கல்விகுழு | 2. 1948 | B. | 3 | 4 | 2 | 1 |
| c. மெக்காலே கல்வி கொள்கை | 3. 1882 | **C.** | **2** | **4** | **1** | **3** |
| d. ஹண்டர் கல்வி குழு | 4. 1964 | D. | 4 | 3 | 2 | 1 |

103. மாநில சுகாதார பணி என்ற அமைப்பு தமிழ்நாட்டில் ஆரம்பிக்கப்பட்ட வருடம்

A. 2004 **B. 2005** C. 2006 D. 2007

104. பல்லவ மன்னர்களின் கடைசி அரசன் யார்?

**A. அபராஜிதன்**
B. சிம்மவிஷ்ணு
C. மூனறாம் நந்திவர்மன்
D. இரண்டாம் நரசிம்மவர்மன்

105. பொருத்துக :

a. L.M. சிங்வி குழு — 1. கிராமப்புற மேம்பாடுக்கான நிர்வாக ஏற்பாடு
b. G.V.K ராவ் குழு — 2. சமூக அபிவிருத்தி திட்டம்
c. பல்வந்த்ராய் மேத்தா குழு — 3. பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்களின் புத்துயிர்
d. அசோக் மேத்தா குழு — 4. புத்துயிர் அளித்தல் மற்றும் பஞ்சாயத்து முறையை வலுப்படுத்துதல்

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 1 | 3 | 2 | 4 |
| B. | 4 | 3 | 2 | 1 |
| **C.** | **4** | **1** | **2** | **3** |
| D. | 3 | 1 | 4 | 2 |

106. தமிழ்நாட்டுக்குரிய மின் ஆற்றலின் பெரும் பகுதியை கொடுப்பது?

A. காற்றாலை
B. நீர் மின்சார ஆலை
**C. அனல் மின் நிலையம்**
D. ஆலை மின் உற்பத்தி

107. பொருத்துக :

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. கடிகை | 1. ஆங்கிலேயர்கள் | A. | 3 | 4 | 2 | 1 |
| b. வித்யாசாதனம் | 2. பல்லவர்கள் | B. | 2 | 3 | 1 | 4 |
| c. வேதக்கல்லூரி | 3. பாண்டியர்கள் | C. | 4 | 1 | 3 | 2 |
| d. சென்னை பல்கலைக் கழகம் | 4. சோழர்கள் | **D.** | **2** | **3** | **4** | **1** |

108. கீழ்கண்டவற்றுள் எதை தேர்தல் ஆணையம் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிக்கு வழங்குகிறது?

A. கட்சிபெயர் B. தேர்தல் நிதி
**C. தேர்தல் சின்னம்** D. தேர்தல் அறிக்கை

109. தவறான இணையைக் காண்க

A. மும்முடிச்சோழன் – இராஜராஜன்
B. பண்டித சோழன் – முதலாம் இராஜேந்திரன்
C. கிருமி கண்டசோழன் – இரண்டாம் குலோத்தங்கன்
D. சுங்கம் தவிர்த்த சோழன் – மூன்றாம் இராஜேந்திரன்

110. பின்வரும் வரலாற்று நிகழ்வுகளை கால வரிசைப்படுத்துக

1. சௌரி சௌரா நிகழ்வு
2. சுயராஜிய கட்சி
3. வரிகொடா இயக்கம்
4. ஜாலியன் வாலாபாக் படுகொலை

A. 4, 3, 2, 1 B. 2, 3, 1, 4 C. 4, 3, 1, 2 D. 1, 4, 3, 2

111. பொருத்துக :

a. அண்ணாமலை பல்கலைக்கழகம் 1. 1984
b. அழகப்பா பல்கலைக்கழகம் 2. 2002
c. திருவள்ளுவர் பல்கலைக்கழகம் 3. 1985
d. அன்னை தெரசா பல்கலைக்கழகம் 4. 1929

| | a | b | c | d |
|---|---|---|---|---|
| A. | 1 | 3 | 4 | 2 |
| B. | 4 | 3 | 2 | 1 |
| C. | 3 | 1 | 2 | 4 |
| D. | 3 | 4 | 2 | 1 |

112. மத்திய அ ரசின் நேரடி வருமானத்தில் தொடர்பு இல்லாதது எது?

A. வருமான வரி
B. சொத்து மற்றும் மூலதன் வரி
C பண்டக மற்றும் பணி வரி
D. பங்காதாய மற்றும் இலாப வரி

113. பின்வருவனவற்றை பொருத்தி சரியான குறியீடுகளுடன் சரியானதை காண்க

a. முதல் சத்தியாகிரகம் 1. சைமன் குழு எதிர்ப்பு போராட்டம்
b. லாலா லஜபதி ராய் 2. முதல் முஸ்லிம் தலைவர்
c. இந்திய பாகிஸ்தான் எல்லை 3. அன்னிபெசன்ட்
d. பக்ருதீன் தியாப்ஜி 4. ராட்கிளிப் பிரவின்
e. லக்னோ மாநாடு 5. வினோபாவே

| | a | b | c | d | e |
|---|---|---|---|---|---|
| A. | 4 | 1 | 2 | 3 | 5 |
| B. | 3 | 4 | 2 | 1 | 5 |
| C. | 4 | 3 | 1 | 2 | 5 |
| D. | 5 | 1 | 4 | 2 | 3 |

114. பண்பெனப் பாடுவது பாடறிந்து ஒழுகுதல் எனக் கூறும் நூல் எது?

A. கலித்தொகை B. புறநானூறு
C. மதுரைக் காஞ்சி D. பட்டினப்பாலை

115. கீழ்கண்டவற்றுள் சரியானது எது / எவை?

1. இந்தியாவில் அடிப்படை உரிமைகள் முழுமையானவை
2. அடிப்படை உரிமைகள் நடைமுறைப்படுத்தகூடியவை

A. 1 மட்டும் B. 2 மட்டும்
C. இரண்டும் D. இரண்டும் தவறு

116. பொருத்துக :

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. குறிஞ்சி | 1. இருத்தல் | A. | 4 | 3 | 2 | 1 |
| b. முல்லை | 2. புணர்தல் | B. | 3 | 4 | 1 | 2 |
| c. மருதம் | 3. இரங்கல் | C. | 2 | 1 | 4 | 3 |
| d. நெய்தல் | 4. ஊடல் | D. | 2 | 4 | 3 | 1 |

117. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாத கூற்றுகள் எது / எவை?

I. இல்லம் தேடி கல்வி திட்டம் விழுப்புரம் மாவட்டம் மரக்காணம் அருகே முதலியார் குப்பத்தில் தமிழக முதல்வர் மு. க. ஸ்டாலின் துவக்கி வைத்தார்.

II. இத்திட்டத்தின் வாயிலாக அரசுக்கு சொந்தமான இடங்களில் மாலை 5 மணி முதல் இரவு 7 மணி வரை கற்றல் செயல்பாடுகள் நடைபெறும்

III. இத்திட்டம் அக்டோபர் 27, 2021 இல் 12 மாவட்டங்களில் முதல் கட்டமாக துவங்கப்பட்டது

IV. தொடுவானம் – மாணவர்களின் செயல்திட்டங்களால் உருவாக்கப்பட்ட படைப்புகளுக்கு விருதுகள் வழங்குவது

A. I மற்றும் II　B. II மற்றும் IV　C. III மட்டும்　D. IV மட்டும்

118. எந்த பாராளுமன்றம் (இந்திய) குடும்ப வன்முறை பெண்கள் பாதுகாப்பு சட்டத்தை இயற்றியது?

A. 2003　B. 2004　C. 2005　D. 2006

119. "நவீன இந்தியாவின் விடிவெள்ளி" என்று அழைக்கப்படுபவர் யார்?

A. சுவாமி தயானந்த சரஸ்வதி
B. இராஜாராம் மோகன் ராய்
C. பாலகங்காதர திலகர்
D. ஆத்மராம் பாண்டுராங்

120. இந்தியாவில் மக்கள் தொகை வளர்ச்சிக்கான காரணம்/காரணங்கள் எவை? யாவை?

1. இறப்பு விகிதம் குறைதல்　2. குறைந்த கல்வியறிவு　3. காலந்தாழ்ந்த திருமணம்

A. 1 மட்டும்　B. 1 மற்றும் 2 மட்டும்
C. 1 மற்றும் 3 மட்டும்　D. 1, 2 மற்றும் 3

121. பொருத்துக :

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. ரீகர் மண் | 1. சிவகங்கை, இராமநாதபுரம் | A. | 1 | 3 | 4 | 2 |
| b. செம்மண் | 2. கரூர் | B. | 4 | 3 | 2 | 1 |
| c. கொண்டைகடலை | 3. வண்டல் மண் | C. | 3 | 1 | 4 | 2 |
| d. TNPL | 4. கோயம்புத்தூர் | D. | 3 | 4 | 2 | 1 |

122. மத்திய தகவல் ஆணையம் எந்த அமைச்சகத்தின் கீழ் வருகிறது?

A. உள்துறை அமைச்சகம்　B. பணியாளர் நல அமைச்சகம்
C. சமூகநீதி அதிகாரமளித்தல் அமைச்சகம்　D. ஒளிபரப்பு அமைச்சகம்

123. பொருத்துக :

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. இல்பர்ட் மசோதா | 1. தாதாபாய் நௌரோஜி | A. | 4 | 3 | 2 | 1 |
| b. இந்திய பணியாளர் சங்கம் | 2. லிட்டன் பிரபு | B. | 3 | 4 | 1 | 2 |
| c. செல்வச் சுரண்டல் கோட்பாடு | 3. ரிப்பன் பிரபு | C. | 2 | 1 | 3 | 4 |
| d. டெல்லி தர்பார் | 4. கோபால கிருஷ்ண கோகலே | D. | 3 | 1 | 2 | 4 |

124. விஸ்வநாத நாயக்கர் தன் தளவாய் அரியநாதருடன் இணைந்து பாளையக்காரர் முறையை தோற்றுவித்த ஆண்டு எது?

A. 1528 B. 1529 C. 1502 D. 1509

125. பொருத்துக

| மலைக்கணவாய் | மாநிலம் | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. பூலோ | 1. சிக்கிம் | A. | 4 | 1 | 2 | 3 |
| b. கார்டுங்லா | 2. ஜம்மு காஷ்மீர் | B. | 3 | 4 | 2 | 1 |
| c. நாதுலா | 3. இமாச்சல பிரதேசம் | C. | 4 | 3 | 1 | 2 |
| d. சிப்கிலா | 4. அருணாச்சல பிரதேசம் | D. | 4 | 2 | 1 | 3 |

126. ராஜா என்பவர் ரூ. 12,000 ஐ இரண்டாக பிரித்து ராஜி என்பவருக்கு 3 ஆண்டுகளுக்கு 4% க்கும் குமார் என்பவருக்கு 4 ஆண்டுகளுக்கு 1% வட்டிவீதத்திலும் பகிர்ந்து அளித்தார் இருவரிடமும் இருந்து பெறப்பட்ட தனி வட்டியானது சமம் எனில் இருவருக்கும் பகிர்ந்தளிக்கப்பட்ட தொகை எவ்வளவு?

A. 4000, 8000 B. 6000, 6000 C. 3000, 9000 D. 5000, 7000

127. முதல் $n$ இயல் எண் கணங்களின் கூடுதல் 2025 எனில் $n$ ன் மதிப்பு என்ன?

A. 8 B. 7 C. 9 D. 10

128. ரூ. 12680 தொகையானது 15% தனிவட்டி வீதத்தில் எத்தனை ஆண்டுகளில் ரூ. 35504 ஆக மாறும்?

A. 15 ஆண்டுகள் B. 13 ஆண்டுகள் C. 14 ஆண்டுகள் D. 12 ஆண்டுகள்

129. ஆண்டுக்கு ஒரு முறை வட்டி காணும் முறையில் ரூ. 15625 க்கு ஆண்டு வட்டி 8% வீதம் எனில் 3 ஆண்டுகளுக்கு கூட்டு வட்டியைக் காண்க.

A. ரூ. 4058 B. ரூ. 4000 C. ரூ. 4055 D. ரூ. 4200

130. $r_1$ அலகுகள் ஆரமுள்ள ஒரு கோளப்பந்து உருக்கப்பட்டு $r_2$ அலகுகள் ஆரமுடைய 8 சம கோளப்பந்துகளாக ஆக்கப்படுகிறது எனில் $r_1 : r_2$ என்ன?

A. 2 : 1 B. 1 : 2 C. 4 : 1 D. 1 : 4

131. அரையாண்டிற்கு ஒரு முறை கூட்டு வட்டி காணும் முறையில் ரூ. 24000 க்கு ஆண்டொன்றுக்கு 10% வட்டி வீதம் $1^1/_2$ ஆண்டுகளுக்கு கிடைக்கும் கூட்டு வட்டி எவ்வளவு?

A. ரூ. 2500 B. ரூ. 3500 C. ரூ. 3783 D. ரூ. 3400

132. ஆண்டுக்கு ஒரு முறை கூட்டு வட்டி காணும் முறையில் ரூ. 640 ஆனது இரண்டு ஆண்டுகளில் 774.40 ஆகும் எனில் கூட்டு வட்டி வீதம் காண்க.

A. 12% B. 8% C. 10% D. 20%

133. $8,\ 7\frac{1}{4},\ 6\frac{1}{2},\ 5\frac{3}{4}\ldots\ldots\ldots$ என்ற கூட்டுத் தொடர் வரிசையின் முதல் 15 உறுப்புகளின் கூடுதல் என்ன?

A. 210 B. $\frac{165}{4}$ C. $\frac{179}{4}$ D. 242

134. ரூ. 18000 க்கு இரண்டு ஆண்டுகளுக்கு 15% கூட்டுவட்டி வீதத்தில் கூட்டு வட்டிக்கும் தனிவட்டிக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

A. ரூ. 402 B. ரூ. 405 C. ரூ. 400 D. ரூ. 408

135. 88 ச. செமீ வளைபரப்புடைய ஒரு நேர் வட்ட உருளையின் உயரம் 14 செ. மீ எனில் உருளையின் விட்டம் என்ன?

A. 1 செ.மீ B. 3 செ. மீ C. 4 செ. மீ **D. 2 செ. மீ**

136. கீழ்க்கண்டவற்றுள் பொருந்தாத கூற்றுகள் எது / எவை?

I. தமிழ்நாட்டின் மிக நீளமான தேசிய நெடுஞ்சாலை NH 785 ஆகும்
II. தெற்கு ரயில்வேயின் தலைமையகம் சென்னை
III. இந்தியாவின் மூன்றாவது பெரிய விமான நிலையம் கல்கத்தா ஆகும்
IV. தமிழக கடற்கரையின் நீளம் 1076 கி. மீ. ஆகும்

A. I மற்றும் II **B. I மற்றும் III** C. I மட்டும் B. I மற்றும் IV

137. பின்வருவனவற்றில் எது நதிகளின் காலநிலை தொடர்பான வெப்பமயமாதலின் விளைவு?

**A. நீர் உப்புத்தன்மை மாற்றங்கள்**
B. மீன்கள் இடப்பெயர்வு முறை மாற்றங்கள்
C. நோய்கிருமிகள் எண்ணிக்கை மாற்றங்கள்
D. நீர் அசுத்த மட்டத்தில் மாற்றங்கள்

138. கீழ்க்கண்டவற்றுள் எது நிறையை அளவிடும் கருவியல்ல?

**A. சுருள் தராசு** B. பொதுத் தராசு
C. இயற்பியல் தராசு D. எண்ணியல் தராசு

139. பொருத்துக :

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. சம்பந்தர் | 1. சன்மார்க்கம் | A. | 2 | 3 | 1 | 4 |
| b. திருநாவுக்கரசர் | 2. சகமார்க்கம் | B. | 3 | 2 | 4 | 1 |
| c. சுந்தரர் | 3. தாசமார்க்கம் | C. | 1 | 3 | 2 | 4 |
| d. மாணிக்கவாசகர் | 4. சத்புத்திர மார்க்கம் | **D.** | **4** | **3** | **2** | **1** |

140. 2023 ஆம் ஆண்டை எந்த ஆண்டாக ஐ.நா. பொதுச்சபை அறிவித்துள்ளது?

A. சர்வதேச மீன்வள ஆண்டாக
**B. சர்வதேச சிறுதானிய ஆண்டாக**
C. அமைதி மற்றும் நம்பிக்கை
D. பழங்கள், காய்கறி ஆண்டாக

141. டாக்டர் முத்துலட்சுமி ரெட்டி சென்னை மருத்துவ கல்லூரியில் டாக்டர் பட்டம் பெற்ற ஆண்டு?

A. 1906 **B. 1912** C. 1954 D. 1960

142. ஆசியாவின் டெட்ராய்ட் என்று சென்னை ஏன் அழைக்கப்படுகிறது?

A. ஜவுளி தொழில் இருப்பதனால்
**B. மோட்டர் தொழில் இருப்பதனால்**
C. தோல் தொழில் இருப்பதனால்
D. திரைப்படத் தொழில் இருப்பதனால்

143. மின்னாற்றல் வெப்ப ஆற்றலாக மாற்றப்படும் நிகழ்வு?

A. ஓம் விதி B. கெல்வின் விதி **C. ஜூல் விதி** D. மின்னியற்றி விதி

144. பாரதமாதா சங்கத்தை நீலகண்ட பிரம்மச்சாரி ஏற்படுத்திய ஆண்டு எது?

A. 1903 **B. 1904** C. 1909 D. 1910

145. NEO – 01 என்னும் விண்வெளிக்கான புத்தாக்க நிறுவனத்தினை தொடங்கிய நாடு

A. இஸ்ரேல் B. அமெரிக்கா C. சீனா D. ஜப்பான்

146. தேசிய குடல்புழு நீக்கி தினம்?

A. பிப்ரவரி 10 B. பிப்ரவரி 28 C. பிப்ரவரி 01 D. பிப்ரவரி 04

147. சிவாலிக் மலை எங்கு அமைந்துள்ளது?

A. வெளிப்புற இமயமலை B. உயர் இமயமலை
C. உப இமயமலை D. மத்திய இமயமலை

148. சுப்ரமணிய சிவா வெளியிடாத இதழ் எது?

A. ஞானபானு B. விவேகபானு C. பிரபஞ்சமித்திரன் D. இந்திய தேசாந்திரி

149. எதிரொலிக்கப்பட்ட ஒலியை தெளிவாக கேட்க ஒலி மற்றும் எதிரொலிக்கு இடைப்பட்ட கால அளவு என்ன?

A. 1 விநாடி B. 0.1 வினாடி C. 0.01 வினாடி D. 0.001 வினாடி

150. உலக சுகாதார அமைப்பு முதல் உயிரி மைய வசதியை எங்கு நிறுவ உள்ளது?

A. ரஷ்யா B. கனடா C. அமெரிக்கா D. சுவிட்சர்லாந்து

151. புவிசார் குறியீடு வரிசையில் 29 வது ஆக இணைந்துள்ளது எது?

A. கொடைக்கானல் மலைப்பூண்டு B. திண்டுக்கல் பூட்டு
C. கோயம்புத்தூர் மாவு அறைக்கும் இயந்திரம் D. பழனி பஞ்சாமிர்தம்

152. இரைப்பை சார் உடற் செயலியலின் தந்தை என அறியப்படுபவர் யார்?

A. ஃபார்மர் B. ஃபிளமிங் C. வில்லியம் பியூமன்ட் D. ஜோசப் இமுர்ரே

153. மேட்டூர் நீர் தேக்கம் இவ்வாறும் அழைக்கப்படுகிறது

A. மால்கம் நீர் தேக்கம் B. பென்னி நீர் தேக்கம்
C. ஸ்டேனிஸ் நீர் தேக்கம் D. ஸ்டான்லி நீர் தேக்கம்

154. பொருத்துக

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. கீழடி | 1. இராமநாதபுரம் | A. | 3 | 4 | 2 | 1 |
| b. அரிக்கமேடு | 2. ஈரோடு | B. | 4 | 3 | 2 | 1 |
| c. கொடுமணல் | 3. பாண்டிச்சேரி | C. | 2 | 1 | 3 | 4 |
| d. அழகன்குளம் | 4. சிவகங்கை | D. | 4 | 2 | 3 | 1 |

155. 2023 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகள் எங்கு நடைபெற உள்ளது?

A. கத்தார் B. லண்டன் C. லாஸ் ஏஞ்சல்ஸ் D. பாரீஸ்

156. பொருத்துக :

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. மிட்டேமீல்ஸ் | 1. 2019 | A. | 1 | 3 | 4 | 2 |
| b. மதிய உணவுத் திட்டம் | 2. 1925 | B. | 3 | 1 | 4 | 2 |
| c. சத்துணவு திட்டம் | 3. 1956 | C. | 2 | 3 | 4 | 1 |
| d. அட்சயபாத்ரா | 4. 1982 | D. | 1 | 2 | 3 | 4 |

157. கீழ்கண்டவற்றுள் திட்டத்தை உருவாக்குதல் மற்றும் செயல்படுத்துவதில் திட்டக்குழுவுடன் தொடர்புடையது எது?

A. திட்டக்குழு B. தேசிய வளர்ச்சிக்குழு C. நிதிக்குழு D. நாடாளுமன்றம்

158. G. சுப்பிரமணிய அய்யர், M. வீரராகவாச்சாரி ஆகியோரால் 'தி இந்து' என்ற ஆங்கில நாளிதழ் தொடங்கப்பட்ட ஆண்டு?

A. 1882 B. 1880 C. 1881 D. 1878

159. பொருத்துக :

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. Vit – $B_1$ | 1. டெர்மாடிட்ஸ் | A. | 3 | 4 | 2 | 1 |
| b. Vit – $B_2$ | 2. பெலக்ரா | B. | 3 | 2 | 4 | 1 |
| c. Vit – $B_3$ | 3. பெரிபெரி | C. | 2 | 4 | 1 | 3 |
| d. Vit – $B_6$ | 4. எரிபோபிளானோசிஸ் | D. | 4 | 2 | 1 | 3 |

160. உலகிலேயே முதன் முறையாக செயற்கை நுண்ணறிவு நீதிபதியை அறிமுகப்படுத்திய நாடு?

A. பிரான்ஸ் B. ரஷ்யா C. சீனா D. அமெரிக்கா

161. ஒரு பகடை உருட்டப்படும் அதே நேரத்தில் ஒரு நாணயமும் சுண்டப்படுகிறது பகடையில் ஒற்றைபடை எண் கிடைப்பதற்கும் நாணயத்தில் தலை கிடைப்பதற்குமான நிகழ்தகவு என்ன?

A. $\frac{1}{2}$ B. $\frac{3}{4}$ C. $\frac{1}{4}$ D. $\frac{2}{5}$

162. *$P, q, r$ ன் திட்ட விலக்கம் S எனில் $P-3,\ q-3,\ r-3$ இன் திட்ட விலக்கம் என்ன?*

A. $S-3$ B. $3s$ C. $\frac{S}{3}$ D. S

163. ஓர் வேலையின் ஒரு பகுதியை A என்பவர் 10 நாட்களிலும் B என்பவர் 15 நாட்களிலும் செய்வர் இருவரும் 5 நாட்கள் வேலை செய்தனர் மீதி வேலையை C என்பவர் 2 நாட்களில் செய்து முடித்தார். மொத்த வேலைக்குரிய கூலி ரூ. 5,000 எனில் B மற்றும் C யின் தினக்கூலி என்ன?

A. ரூ. 250 B. ரூ. 225 C. ரூ. 300 D. ரூ. 500

164. $A : B = 3 : 4$ மற்றும் $B : C = 8 : 9$ எனில் $A : C$ ன் மதிப்பு என்ன?

A. $1 : 3$ B. $3 : 2$ C. $2 : 3$ D. $1 : 2$

165. $\frac{14x^3}{y} \div \frac{7x}{3y^4}$ சுருக்குக.

A. $21x^3y^3$ B. $\frac{2x^3}{3y^3}$ C. $6x^3y^3$ D. $\frac{3y^3}{2x^3}$

166. $A + B$ ன் $20\% = (A - B)\ 50\%$ எனில் A மற்றும் B யின் விகிதம் என்ன?

A. $7 : 3$ B. $3 : 7$ C. $3 : 8$ D. $8 : 3$

167. A, B, C ஆகிய மூவரின் மாதச் சம்பளம் 2 : 3 : 5 ஆகும் C ன் மாதச் சம்பளம் A யைக் காட்டிலும் ரூ. 1200 அதிகம் எனில் B ன் ஆண்டு சம்பளம் எவ்வளவு?

A. ரூ. 14,400 B. ரூ. 24,000 C. ரூ. 12,000 D. ரூ. 2,000

168. $16m,\ -12m^2n^2,\ 8n^3$ இன் மீ. பொ. ம. என்ன?

A. $16m^2n^2$  B. $8mn$  C. $-48m^2n^3$  D. $48m^2n^3$

169. $x$ ன் சம்பளம் $y$ ன் சம்பளத்தை விட *20%* குறைவு இப்போது $x$ ன் சம்பளத்தைவிட $y$ ன் சம்பளம் எத்தனை சதவீதம் அதிகம் எனக் காண்க.

A. 20%  B. 40%  C. $16\frac{1}{6}\%$  D. 25%

170. துத்தநாகம் மற்றும் இரும்புக் கலவை 50 கிராம் எடை கொண்டது இதில் 80% துத்தநாகம் உள்ளது. கலவையில் எவ்வளவு கிராம் துத்தநாகம் சேர்க்கப்பட்டால் துத்தநாகத்தின் சதவீதம் 90% ஆக மாறும்?

A. 60 கிராம்  B. 50 கிராம்  C. 30 கிராம்  D. 45 கிராம்

171. நாடாளுமன்றத்தின் அதிகாரங்கள் பின்வருவனவற்றுள் எவை சரியல்ல?

A. நாடாளுமன்றம் மூன்று விதமான அரசியல் பிரகடனத்தை அனுமதிக்கலாம்
B. நாடாளுமன்றம் மாநில சட்ட மேலவையை நீக்க முடியாது
C. மாநிலங்களின் எல்லைகளை மாற்ற முடியும்
D. ஒரு உயர்நீதிமன்றத்தை இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட மாநிலங்களுக்கு ஏற்படுத்தலாம்

172. முதல் ஐந்தாண்டு திட்டம் எந்த திட்ட மாதிரியை அடிப்படையாகக் கொண்டது?

A. மகலநோபிஸ் மாதிரி
B. கரீபி ஹட்டோ மாதிரி
C. நேருவின் மாதிரி
D. ஹாராட் டோமர்

173. நீல்சிலை அகற்றும் போராட்டத்தில் தன்னுடைய 9 வயது மகளுடன் கலந்து கொண்ட தமிழக பெண்மணி யார்?

A. அம்புஜத்தம்மாள்
B. அஞ்சலையம்மாள்
C. தர்மாம்பாள்
D. இராமாமிர்தம்

174. 'பீரியான்கள்' பற்றிய தவறான கூற்று எது?

A. பீரியான்கள் பதித்த உருவங்கள்–ஸ்டான்லி பிஃப்ரூஸ்னர் (1982)
B. புரதத்தை மட்டுமே கொண்டுள்ள வைரஸ்
C. இவை குச்சி வடிவம் உடையவை
D. இவை நரம்பு திசுக்களை சீர்குலைவடையச் செய்கிறது

175. இந்தியாவின் முதல் புவியியல் பூங்கா எங்கு நிறுவப்பட உள்ளது?

A. சூரத்  B. கான்பூர்  C. ஜபல்பூர்  D. ஜெய்ப்பூர்

176. ஜல்லிக்கட்டு, ஏறுதழுவுதல் போன்ற தமிழனின் கலாச்சாரம் மற்றும் பண்பாடு இந்திய அரசியலமைப்பின் _____ பிரிவின்படி பாதுகாப்பு அளிக்கப்பட்டுள்ளது?

A. 29 (1)  B. 39 (1)  C. 49 (1)  D. 59 (1)

177. முதல் சிறுநீரக மாற்று அறுவை சிகிச்சை செய்த ஆண்டு?

A. 1934  B. 1944  C. 1954  D. 1964


Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

178. கூற்று (கூ) : ஏழாவது ஐந்தாண்டு திட்டம் வெற்றி பெற்றது

காரணம் (கா) : முதன்முறையாக பொதுத்துறைக்கு மேலாக தனியார் துறைக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது

A. (கூ) மற்றும் (கா) இரண்டும் சரி ஆனால் (கா) என்பது சரியான விளக்கமல்ல
B. (கூ) மற்றும் (கா) இரண்டும் சரி மேலும் (கா) என்பது சரியான விளக்கம்
C. (கூ) சரி ஆனால் (க) தவறு
D. (கூ) தவறு ஆனால் (கா) சரி

179. தேசிய நோய் தடுப்பு தினம் அனுசரிக்கப்படுவது?

A. மார்ச் 15 B. மார்ச் 16 C. மார்ச் 17 D. மார்ச் 18

180. கீழ்கண்டவற்றில் எவர் வரைவுக்குழுவின் உறுப்பினராக இல்லை?

A. K. M. முன்ஷி
B. அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர்
C. பட்டாபி சீத்தாராமையா
D. கிருஷ்ணமாச்சாரி

181. தாராளமயமாக்கல் சுதந்திரம் வழங்குவது?

A. தனியார் துறைக்கு
B. தொழில் துறைக்கு
C. பன்னாட்டு துறைக்கு
D. வேளாண் துறைக்கு

182. கீழ்கண்டவற்றில் எவை கலவை அல்ல?

A. இரத்தம் B. காற்று C. கரியமில வாயு D. புகை

183. ஈ.வெ.ராவுக்கு பெரியார் என்ற பட்டத்தை வழங்கிய பெண்மணி யார்?

A. முத்துலெட்சுமி ரெட்டி
B. டாக்டர் S. தர்மாம்பாள்
C. அஞ்சலையம்மாள்
D. இராமாமிர்தம்

184. இந்தியாவில் கோவிட் –19 சிகிச்சைக்கான ஊசி இல்லாத முதல் தடுப்பூசி?

A. சைகோவ்– டி B. ஸ்புட்னிக் C. மாடர்னா D. கோவாக்ஸ்

185. பொருத்துக :

| | | | a | b | c | d |
|---|---|---|---|---|---|---|
| a. மெக்னீசியம் | 1. உரங்கள் தயாரிக்க | A. | 3 | 1 | 4 | 2 |
| b. சல்பர் | 2. கணிணி சிப்புகள் தயாரிக்க | B. | 1 | 2 | 3 | 4 |
| c. காலியம் | 3. வெடிபொருள் தயாரிக்க | C. | 3 | 4 | 2 | 1 |
| d. சிலிக்கன் | 4. அலைபேசி தயாரிக்க | D. | 4 | 2 | 3 | 1 |

186. நீதித் துறையானது நிர்வாக துறையிடம் இருந்து கீழ்கண்ட எந்த சட்ட உறுப்பு மூலம் பிரிக்கப்பட்டது

A. விதி 50 B. விதி 64 C. விதி 60 D. விதி 51

187. ஒருங்கிணைந்த ஊரக வளர்ச்சித் திட்டம் அறிமுகம் செய்யப்பட்ட ஆண்டு?

A. 1990 B. 1992 C. 1982 D. 1980

188. பொருத்தமற்ற இணை எது?

A. குடியரசு – 1925
B. ரிவோல்ட் – 1927
C. பகுத்தறிவு – 1934
D. விடுதலை – 1935

189. முதல் இந்திய – மத்திய ஆசிய உச்சி மாநாட்டை நடத்திய நாடு

A. ரஷ்யா B. கஜகஸ்தான் C. இந்தியா D. சிங்கப்பூர்

190. ஒரு மாநில அரசு சேவை ஆணையத்தி;ன் உறுப்பினர்கள் யாரால் முறையே நியமிக்க மற்றும் நீக்க முடியும்?

A. ஆளுநர், ஆளுநர்
B. ஆளுநர், குடியரசுத்தலைவர்
C. குடியரசுத்தலைவர், ஆளுநர்
D. குடியரசுத்தலைவர், குடியரசுத்தலைவர்

191. 1928ல் அகில இந்திய ஒடுக்கப்பட்டோர் சங்கம் என்ற அமைப்பினை நிறுவியவர்?

A. இரட்டைமலை சீனிவாசன்
B. மயிலை சின்னத்தம்பி ராஜா
C. ம. சிங்காரவேலர்
D. செண்பகராமன்

192. உழவன் கடன் அட்டை ஏற்படுத்திய ஆண்டு?

A. 1996 – 1997 B. 1998 – 1999 C. 1999 – 2000 D. 2000 – 2001

193. 2023 ஆம் ஆண்டு 18வது ஜி–20 உச்சி மாநாட்டை நடத்தவுள்ள நாடு எது?

A. இந்தியா B. பிரான்ஸ் C. அமெரிக்கா D. தென் கொரியா

194. கீழ்க்கண்ட கூற்றுகளை கவனி, சரியான விடையை தேர்ந்தெடு:

I. சோடியம் – மென்மையான உலோகம்
II. பாதரசம் – நீர்ம நிலை அலோகம்
III. வைரம் – கடினமான மற்றும் பளப்பளப்பான உலோகம்
IV. புரோமின் – நீர்ம நிலை உலோகம்

A. I சரி II, III, IV தவறு
B. I தவறு II, III, IV சரி
C. I, II சரி III, IV தவறு
D. அனைத்தும் சரி

195. இரண்டு எண்களின் பெருக்கற்பலன் 4107 அவற்றின் மீ.பொ.வ 37 எனில் அந்த எண்களில் பெரிய எண் எது?

A. 185 B. 111 C. 107 D. 101

196. ஒரு சங்கேத மொழியில் $HE = 41$ மற்றும் $GO = 32$ எனில் SHOE என்பது என்ன?

A. 59 B. 60 C. 61 D. 62

197. DIAMOND என்பது GLDPRQG எனக் குறியீடு செய்யப்பட்டால் SYSTEM என்பதன் குறியீடு?

A. VBVWHP B. VBVWOP C. VBWVPH D. VBOWPV

198. 1657 மற்றும் 2037 ஐ வகுக்கும் போது மீதி முறையே 6 மற்றும் 5 ஆகியவற்றை தரக்கூடிய மிகப்பெரிய எண் எது?

A. 13 B. 16 C. 127 D. 381

199. + என்பது X, – என்பது ÷, X என்பது – மற்றும் ÷ என்பது + எனக் குறித்தால் $25 + 32 - 4 \times 12 \div 3$ என்பது?

A. 137 B. –125 C. +191 D. –197

200. இன்குலாப் ஜிந்தாபாத் (புரட்சி ஓங்குக) என்று முழக்கமிட்டவர் யார்?

A. கல்பனாத்த் B. சுபாஷ் சந்திரபோஸ் C. குதிராம் போஸ் D. பகத்சிங்

TARGET STUDY CENTRE
(வெற்றி இலக்கை நோக்கி சங்கமம்) 7639000355
TNUSRB POLICE
ONLY PSYCHOLOGY
உளவியல்
புதன்தோறும் சிறப்பு வகுப்பு
(10 Am - 1 Pm) அட்மிஷன் நடைபெறுகிறது
இடம்:323 A, காமராஜர் வீதி, விழுப்புரம் (கணேஷ் ஜூவல்லரி மாடி)
Cell: 7639000355, 7639000366

TARGET STUDY CENTRE
(வெற்றி இலக்கை நோக்கி சங்கமம்) 7639000355
TRB - TET PAPER I, II
6 - 12th வகுப்பு வாரியாக தேர்வு
ONLINE TEST
www.targettnpsc.com அட்மிஷன் நடைபெறுகிது
இடம்:323 A, காமராஜர் வீதி, விழுப்புரம் (கணேஷ் ஜூவல்லரி மாடி)
Cell: 7639000355, 7639000366

TARGET STUDY CENTRE
(வெற்றி இலக்கை நோக்கி சங்கமம்) 7639000355
TNPSC Gr VIIB, VIII
EXECUTIVE OFFICER GR III, IV
(இந்து அறநிலைத் துறை)
Daily / Weekend CLASS & TEST BATCH
www.targettnpsc.com அட்மிஷன் நடைபெறுகிது
இடம்:323 A, காமராஜர் வீதி, விழுப்புரம் (கணேஷ் ஜூவல்லரி மாடி)
Cell: 7639000355, 7639000366

TARGET STUDY CENTRE - VILLUPURAM
7639000355 (வெற்றி இலக்கை நோக்கி சங்கமம்) 7639000366

**GRIVGTGS/2022**

Register Number

# 2022

# GENERAL TAMIL (SSLC Standard) and GENERAL STUDIES (SSLC Standard)

## This Booklet Contains

## Part-A ( GENERAL TAMIL - SSLC Std) and Part-B (General Studies - SSLC Std)

**Duration: Three Hours]** **[Total Marks : 300**

**Read the following instructions carefully before you begin to answer the questions.**

---

### IMPORTANT INSTRUCTIONS

1. You will be supplied with this question booklet 15 minutes prior to the commencement of the examination.
2. This question booklet contains 200 questions.
3. **Part-B of answer sheet of the candidates will not be evaluated, if the candidate does not secure minimum qualifying mark (40% – i.e. 60 marks) in Part-A. For Part-A qualified candidates, marks obtained in Part-B only will be considered for ranking list.**
4. Before answering the questions, you shall check whether all the questions are printed serially and ensure that there are no blank pages in the question booklet. **If any defect is noticed in the question booklet, it shall be reported to the invigilator within the first 10 minutes and get it replaced with a complete question booklet. If the defect is reported after the commencement of the examination, it will not be replaced.**
5. Answer **all** the questions. All the questions carry equal marks.
6. You must write your register number in the space provided on the top right side of this page. Do not write anything else on the question booklet.
7. An answer sheet will be supplied to you separately by the room invigilator to shade the answers. Instructions regarding filling of answers etc., which are to be followed mandatorily, are provided in the answer sheet and in the memorandum of admission (Hall Ticket).
8. You shall write and shade your question booklet number in the space provided on page one of the answer sheet with **BLACK INK BALL POINT PEN.** If you do not shade correctly or fail to shade the question booklet number, your answer sheet will be invalidated.
9. Each question comprises of five responses (answers) : i.e. (A), (B), (C), (D) and (E). You have to select ONLY ONE correct answer from (A) or (B) or (C) or (D) and shade the same in your answer sheet. If you feel that there are more than one correct answer, shade the one which you consider the best. **If you do not know the answer, you have to mandatorily shade (E).** In any case, choose ONLY ONE answer for each question. If you shade more than one answer for a question, it will be treated as a wrong answer even if one of the given answers happens to be correct.
10. You should not remove or tear off any sheet from this question booklet. You are not allowed to take this question booklet and the answer sheet out of the examination room during the time of examination. After the examination, you must hand over your answer sheet to the invigilator. You are allowed to take the question booklet with you only after the examination is over.
11. **You should not make any marking in the question booklet except in the sheets before the last page of the question booklet, which can be used for rough work. This should be strictly adhered to.**
12. Question in Sl. No 101 to 200 (Part-B) the English version is final.
13. Failure to comply with any of the above instructions will render you liable for such action as the Commission may decide at their discretion.

---

TARGET STUDY CENTRE - VILLUPURAM
7639000355 (வெற்றி இலக்கை நோக்கி சங்கமம்) 7639000366

## TNPSC Gr IV MODEL TEST – I

| | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| **C** | **C** | **C** | **A** | **B** | **A** | **C** | **D** | **C** | **D** | **A** | **D** | **B** | **B** | **C** | **D** | **D** | **D** | **C** | **D** |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 | 32 | 33 | 34 | 35 | 36 | 37 | 38 | 39 | 40 |
| **B** | **C** | **A** | **B** | **B** | **D** | **A** | **A** | **A** | **C** | **A** | **D** | **A** | **D** | **D** | **C** | **C** | **D** | **C** | **D** |
| 41 | 42 | 43 | 44 | 45 | 46 | 47 | 48 | 49 | 50 | 51 | 52 | 53 | 54 | 55 | 56 | 57 | 58 | 59 | 60 |
| **D** | **C** | **A** | **C** | **D** | **D** | **D** | **D** | **D** | **C** | **D** | **C** | **B** | **A** | **A** | **C** | **A** | **C** | **C** | **C** |
| 61 | 62 | 63 | 64 | 65 | 66 | 67 | 68 | 69 | 70 | 71 | 72 | 73 | 74 | 75 | 76 | 77 | 78 | 79 | 80 |
| **D** | **B** | **B** | **C** | **B** | **B** | **C** | **C** | **A** | **A** | **B** | **B** | **B** | **D** | **B** | **A** | **D** | **A** | **C** | **B** |
| 81 | 82 | 83 | 84 | 85 | 86 | 87 | 88 | 89 | 90 | 91 | 92 | 93 | 94 | 95 | 96 | 97 | 98 | 99 | 100 |
| **A** | **B** | **D** | **C** | **B** | **D** | **B** | **B** | **D** | **B** | **A** | **A** | **C** | **D** | **A** | **C** | **A** | **B** | **A** | **D** |
| 101 | 102 | 103 | 104 | 105 | 106 | 107 | 108 | 109 | 110 | 111 | 112 | 113 | 114 | 115 | 116 | 117 | 118 | 119 | 120 |
| **B** | **C** | **B** | **A** | **C** | **C** | **D** | **C** | **D** | **C** | **B** | **D** | **D** | **A** | **B** | **C** | **D** | **C** | **B** | **B** |
| 121 | 122 | 123 | 124 | 125 | 126 | 127 | 128 | 129 | 130 | 131 | 132 | 133 | 134 | 135 | 136 | 137 | 138 | 139 | 140 |
| **C** | **B** | **B** | **B** | **D** | **C** | **C** | **D** | **A** | **A** | **C** | **C** | **B** | **B** | **D** | **B** | **A** | **A** | **D** | **B** |
| 141 | 142 | 143 | 144 | 145 | 146 | 147 | 148 | 149 | 150 | 151 | 152 | 153 | 154 | 155 | 156 | 157 | 158 | 159 | 160 |
| **B** | **B** | **C** | **B** | **C** | **A** | **A** | **B** | **B** | **D** | **D** | **C** | **D** | **B** | **C** | **C** | **B** | **D** | **A** | **C** |
| 161 | 162 | 163 | 164 | 165 | 166 | 167 | 168 | 169 | 170 | 171 | 172 | 173 | 174 | 175 | 176 | 177 | 178 | 179 | 180 |
| **C** | **D** | **B** | **C** | **C** | **A** | **A** | **C** | **D** | **B** | **B** | **D** | **B** | **C** | **B** | **A** | **C** | **B** | **B** | **C** |
| 181 | 182 | 183 | 184 | 185 | 186 | 187 | 188 | 189 | 190 | 191 | 192 | 193 | 194 | 195 | 196 | 197 | 198 | 199 | 200 |
| **A** | **C** | **B** | **A** | **A** | **A** | **D** | **B** | **C** | **B** | **B** | **B** | **A** | **A** | **B** | **C** | **A** | **A** | **C** | **D** |

TARGET STUDY CENTRE
(வெற்றி இலக்கை நோக்கி சங்கமம்) 7639000355
TNPSC - TET PAPER I, II
(இடைநிலை ஆசிரியர் நியமன தேர்வு)
MATHS CLASS ONLY
(கணிதம் 6 – 10 வகுப்பு வரை)
புதன் தோறும் சிறப்பு வகுப்பு 10 am - 1 pm / 06 pm - 8 pm அட்மிஷன் நடைபெறுகிறது
இடம்:323 A, காமராஜர் வீதி, விழுப்புரம் (கணேஷ் ஜூவெல்லரி மாடி)
Cell: 7639000355, 7639000366